ஒப்பந்தத்தை ஏதாவது மீறி, உச்ச நீதிமன்றத்தினுடைய அந்த ஆலோசனைக்குப் பிறகும், ஆந்திர அரசு ஈடுபடுமானால், அதை எந்தெந்த வகையிலே இந்த அரசு சந்திக்க வேண்டுமோ, அப்படிச் சந்திக்கும்.

(ஈ) கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அன்பரசன் என்பவரை சிங்கள அரசும், அங்குள்ள காவல் துறையும் சித்ரவதை செய்து படுகொலை செய்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன், என்ன? இந்த subject-ஆ அல்லது வேறு subject-ஆ?

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்கள் உலக நாடுகளில் எங்கு பிழைக்கப் போனாலும், விபத்துக்குள்ளாகி இறப்பது வாடிக்கை; நாம் அந்த உடலைக் கொண்டுவருவது வாடிக்கை; அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கும். ஆனால், நேற்றைய முன்தினம் எங்கள் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த இளங்கோவன் என்பவரின் மகன் அன்பரசன் என்பவரைச் சிங்களப் பேரினவாத அரசும், அங்கிருக்கிற காவல் துறையும் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று, சித்ரவதைக்கு உள்ளாக்கி, அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்த சிங்களப் பேரின அரசு, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, தற்போது அங்கிருக்கிற ஒரு இலட்சம் தமிழர்களைக் கொன்று குவித்து, அவர்களை ருசி கண்டது போதாது என்று, தமிழகத்திலிருந்து பிழைக்கச் சென்ற தமிழர்களையும் (மணியடிக்கப்பெற்றது) அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள்.

திரு. தி. வேல்முருகன்: தாய்த் தமிழ்நாட்டின் தமிழர்களையும் கொன்று குவித்திருப்பதற்கு, அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(ஆ) தமிழகத்தில் வழங்கியுள்ள குடும்ப அட்டைகளில் 1.66 இலட்சம் போலியானவை என்று எல்காட் நிறுவனம் தெரிவித்துள்ளதாக வந்த செய்தி—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழகத்தில் வழங்கப்பட்டுள்ள சுமார் 2 கோடி ரேஷன் அட்டைகளில், 30 இலட்சம் ரேஷன் அட்டைகள் போலியானவை என்று 'எல்காட்' நிறுவனம்மூலம் தெரியவந்துள்ளது